






# கையிலே கலைவண்ணம்

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

கைவினை என்பது சிறப்புத்திறனை உடைய ஒரு தொழில்.
உனக்குத் தெரிந்த கைவினைப் பொருள்கள் சிலவற்றை எழுதுக.

______________________________



தமிழகத்தில் நாம் நமது அன்றாடவாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய, நம் வாழ்விற்கு மிகத் தேவையான பொருள்களில் அழகிய கைவேலைப்பாடுகள் உள்ளன. பண்டைக் காலம் தொட்டே தமிழகம் கைவினை மற்றும் கலைப்பொருள்கள் தயாரிப்பில் சிறந்து விளங்குகின்றது. இப்பொருள்கள் நமது பண்பாடு மற்றும் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றன. அத்தோடு மட்டுமின்றி கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. இவை உலகஅளவில் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன.

நாம் தினமும் பயன்படுத்தக் கூடிய பல கைவினைப் பொருள்கள் இயற்கையில் கிடைக்கும் பொருள்களிலிருந்து செய்யப்பட்டவை.

## பனை ஓலையால் செய்யப்பட்ட பொருள்கள்



கூடைகள்



பனை ஓலை



தட்டுகள்



பைகள்

பழங்காலத்தில், காகிதம் கண்டுபிடிப்பதற்குமுன் நம் முன்னோர்கள் பனை ஓலையால் செய்யப்பட்ட ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்தினர். சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத இயற்கை பொருள்களைக் கொண்டே கைவினைப் பொருள்களைத் தயாரித்தனர்.

## தென்னை







நார்



கயிறு



தேநீர்க்குவளை



துடைப்பம்



கைவினைப்பொருள்கள்


இன்றும், இப்பொருள்களைத் தயாரிப்பவர்கள் உள்ளனர். நம் வீட்டிற்குத் துடைப்பம், கயிறு மற்றும் தூரிகைகள் தேவை. இக்கைவினைப் பொருள்கள் இல்லாவிட்டால் நமது வாழ்க்கை கடினமாக அமையும்.

### டிக்... டிக்... டிக்... செய்யலாமா ?

தேவையான பொருள்கள்:

- ☺ மூன்று தென்னங்குச்சி,
- ☺ ஒரு தென்னங்குரும்பை

படத்தில் உள்ளதைப் போல் குச்சிகளை வளைத்து தென்னங்குரும்பையை செருகவும் பின் அசைத்து சுழற்றிப் பார். டிக்... டிக்... சத்தம் கேட்கிறதா!



## மூங்கிலால் செய்யப்படும் கைவினைப் பொருட்கள்








நம் தமிழகத்தில் பெரும்பாலான கைவினைப் பொருள்கள் மூங்கிலைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. மூங்கில் வேகமாக வளரக்கூடிய ஒரு தாவரம். அவற்றுள் சில 24 மணி நேரத்தில் மூன்று அடி உயரம் வரை வளரும். பண்டைக்காலக் கலையாகிய சிலம்பாட்டம் மூங்கில் தடியைக் கொண்டு பயிற்சி செய்யப்படுகிறது. இனிமையான இசையைத் தரும் புல்லாங்குழல்களும் மூங்கிலினால் தயாரிக்கப்படுகின்றன.


## பிரம்பு மற்றும் பலவித புற்கள் (கோரைப்புல்)















அழகிய கோரைப்பாய்கள் கோரைப்புல்லிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் சதுப்புநிலப் பகுதிகளிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் கோரைப்புற்கள் அதிகம் காணப்படுகின்றன. முற்காலத்தில் பாய்களில் சிவப்பு மற்றும் கறுப்பு நிறத்தை மட்டும் தான் உபயோகித்தனர். இப்பொழுது வண்ணக் கலவைகளால் ஆன பல நிறங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. திருநெல்வேலி பத்தமடைப் பாய் மிகவும் புகழ் பெற்றது. தமிழ்நாட்டுக் கைவினை தயாரிப்பாளர்கள்அன்னாசிப்பழம் மற்றும் வாழை நார்கள் கொண்டும் பாய் பின்னுகின்றனர். தர்மபுரி, சேலம், கோவை, வேலூர், திருச்சி ஆகிய மாவட்டங்கள் இக்கைவினைப் பொருள்களுக்குப் புகழ் பெற்றவை.

## சணலினால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்கள்










### களிமண்



தொன்று தொட்டே நம் தமிழ்நாட்டில் களிமண் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செங்கல் தமிழகத்தில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதுவே கைவினைத் தொழிலாளர்களால் முதன்முதலில் செய்யப்பட்ட பொருளாகும்.



மட்பாண்டங்களின் தனித்துவம் அவற்றை வனையும் விதம், வடிவம், நிறங்கள், வேலைப்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டே அமைகின்றன. வேலூரில் கிடைக்கக் கூடிய சிவப்பு மற்றும் கறுப்பு கலந்த மட்பாண்டங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் காரைக்குடியில் கிடைக்கும் கறுப்புநிற மட்பாண்டங்கள் அவற்றின் வனப்பிற்குப் பெயர்போனவை.



## களிமண்ணால் செய்யப்படும் பொருள்கள்









தஞ்சாவூரில் தயாரிக்கப்படும் தலையாட்டிப் பொம்மை மிகவும் புகழ் பெற்றது.